ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# இளைஞர் முகாம் – 2026

## "மாறிவரும் உலகில் மனித உரிமைகளுக்கான இளைஞர் தலைமைத்துவம்: நேர்மை, உள்ளடக்கல் மற்றும் பொறுப்புள்ள குடியுரிமையை ஊக்குவிக்க இளம் தலைவர்களை வலுப்படுத்துதல்."

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (HRCSL) மனித உரிமைகள் மற்றும் சமூகப் பொறுப்புக்கூறல் தொடர்பான கரும் பொருள் சார்ந்த இளைஞர் முகாம்

இலங்கை வேகமாக மாறிவரும் சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப சூழ்நிலைகளை எதிர்கொண்டு வருகிறது. இது குறிப்பாக இளைஞர்களைப் பாதிக்கும் பல குறிப்பிடத்தக்க மனித உரிமைச் சவால்களை உருவாக்கியுள்ளது. ஜனநாயக ஆளுகை, சட்டப் பாதுகாப்பு மற்றும் கல்விக்கான வாய்ப்புகளை வலுப்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், போதைப்பொருள் பயன்பாடு, லஞ்சம் மற்றும் ஊழல், இணையக் குற்றம் (cybercrime), பொய்த் தகவல்களைப் பரப்புதல், வெறுப்புப் பேச்சு, வன்முறை, பாகுபாடு, சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் மனநலக் கவலைகள் போன்ற தற்காலச் சவால்கள் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதற்குத் தொடர்ந்து தீவிர அச்சுறுத்தல்களாக விளங்குகின்றன.

இலங்கையின் மக்கள் தொகையில் இளைஞர்கள் கணிசமான பங்கைக் கொண்டுள்ளதோடு, நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அதற்கமைய, நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது ஆகிய தனது சட்டப்பூர்வப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு “மாறிவரும் உலகில் மனித உரிமைகளுக்கான இளைஞர் தலைமைத்துவம்: நேர்மை, உள்ளடக்கல் மற்றும் பொறுப்புள்ள குடியுரிமையை ஊக்குவிக்க இளம் தலைவர்களை வலுப்படுத்துதல்" எனும் கருப்பொருளின் கீழ் இளைஞர் முகாம் ஒன்றை நடத்த உத்தேசித்துள்ளது.’’

இத்திட்டத்தின் நோக்கம், புதிதாக உருவெடுத்து வரும் மனித உரிமைச் சவால்களைப் புரிந்து கொண்டு, தங்கள் சமூகங்களுக்குள் திறம்படச் செயல்படுவதற்குத் தேவையான அறிவு, நடைமுறைத் திறன்கள் மற்றும் விழுமியங்களைக் கொண்ட புதிய தலைமுறை இளைஞர்களை உருவாக்குவதாகும். அத்துடன், இளைஞர்கள் நாட்டின் சுறுசுறுப்பான குடிமக்களாக மாறுவதை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இரண்டு இளைஞர் முகாம்களை வெற்றிகரமாக நடத்தியது. இந்த முகாமுக்காக, நாட்டின் அனைத்து 25 மாவட்டங்களிலிருந்தும் இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். கலந்துரையாடல் வழியிலான கற்றல், தலைமைத்துவ மேம்பாடு, நடைமுறைப் பயிற்சிகள், குழு விவாதங்கள், மாதிரிச் செயல்பாடுகள் (simulations), சமூகச் செயல்பாட்டுத் திட்டமிடல் மற்றும் குழுவை உருவாக்கும் பயிற்சிகள் ஆகியவற்றின் மூலம், தற்கால மனித உரிமைப் பிரச்சினைகளைக் விமர்சன ரீதியாக ஆராயவும், தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறன்களை வலுப்படுத்தவும், சட்டபூர்வமான மற்றும் நெறிமுறை சார்ந்த முடிவுகளை எடுக்கவும், தங்கள் சமூகத்தைப் பாதிக்கும் சவால்களுக்கு நடைமுறைச் தீர்வுகளைக் கண்டறியவும் பங்கேற்பாளர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும்.

இளைஞர் தலைமைத்துவம் மற்றும் குடிமக்கள் பங்கேற்பில் முதலீடு செய்வதன் மூலம், இலங்கை முழுவதும் சமத்துவம், நேர்மை, ஜனநாயகப் பங்கேற்பு மற்றும் மனித கண்ணியத்தை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் இளம் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் நாடு தழுவிய வலையமைப்பு ஒன்றை உருவாக்குவதை ஆணைக்குழு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டம் குறிப்பாகப் பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- அடிப்படை மனித உரிமைகள் பற்றியும், தற்போதைய சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பச் சவால்களுக்கு அவற்றுடன் உள்ள தொடர்பு பற்றியும் இளைஞர்களின் புரிதலை அதிகரித்தல்.
- போதைப்பொருள் பயன்பாடு, ஊழல், டிஜிட்டல் உரிமைகள், இணையப் பாதுகாப்பு, பொய்த் தகவல்களைப் பரப்புதல், பாகுபாடு, சுற்றுச்சூழல் நீதி, மனநலம் மற்றும் பொறுப்புள்ள குடியுரிமை உள்ளிட்ட புதிதாக உருவெடுத்து வரும் மனித உரிமைப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரித்தல்.
- நேர்மை, பொறுப்புக்கூறல், சமத்துவம், பங்கேற்பு, பாகுபாடின்மை மற்றும் பன்முகத்தன்மைக்கான மரியாதை ஆகிய விழுமியங்களை ஊக்குவித்தல்.
- இளைஞர்களிடையே தலைமைத்துவம், தொடர்பாடல், குழுப்பணி, சிக்கல்களுக்குத் தீர்வு காணும் திறன், மற்றும் சட்ட மற்றும் சமூக ஆதரவுத் திறன்களை மேம்படுத்துதல்.

- பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பணியிடங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களில் மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் ஜனநாயக விழுமியங்களை ஊக்குவிப்பதில் அர்த்தமுள்ள இளைஞர் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- மனித உரிமை விழிப்புணர்வு, சமூகப் பொறுப்புக்கூறல் மற்றும் குடிமக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கும் மாவட்ட அளவிலான சமூகம் சார்ந்த திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்த பங்கேற்பாளர்களை வலுப்படுத்துதல்.
- இலங்கை முழுவதும் மனித உரிமைகளை மதிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும் இளம் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் நாடு தழுவிய வலையமைப்பு ஒன்றை உருவாக்குதல்.

நிகழ்ச்சி பற்றிய தகவல்கள்:

- முன்மொழியப்பட்ட திகதிகள்: 2026 அக்டோபர் 26 முதல் 2026 அக்டோபர் 31 வரை.
- நடைபெறும் இடம்: பங்கேற்பாளர்களுக்கு பின்னர் அறியத்தரப்படும்
  பங்கேற்பாளர்கள்:
    - இலங்கையின் அனைத்து 25 நிர்வாக மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 55 இளம் ஆண்களும் பெண்களும்.
    - சாத்தியமான இடங்களில் பாலின சமநிலையை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரண்டு பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், இதன்படி 50 மாவட்டப் பிரதிநிதிகள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
    - பல்வகைமை, உள்ளடக்கம், சமமான பங்கேற்பு மற்றும் அர்த்தமுள்ள பிரதிநிதித்துவத்தை திட்டம் முழுவதும் ஊக்குவிப்பதற்காக, மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற விளிம்புநிலை குழுக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட மேலும் ஐந்து (05) பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**விண்ணப்பதாரர்களுக்கான அடிப்படைத் தகுதிகள் மற்றும் தேவைகள்**

அனைத்து விண்ணப்பதாரர்களும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

- வயது: 18 முதல் 29 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
- தொடர்பாடல் திறன்கள்: சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் பயனுள்ள முறையில் தொடர்பாடல் செய்யக்கூடிய திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சுறுசுறுப்பான பங்கேற்பு: முகாம் முழுவதும் நடத்தப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் பயிற்சிகளிலும் முழுமையாகவும் சுறுசுறுப்பாகவும் பங்கேற்பதற்கான திறனும் அர்ப்பணிப்பும் இருத்தல் வேண்டும்.
- திறந்த மனப்பான்மை மற்றும் பன்முகத்தன்மைக்கான மரியாதை: ஆர்வத்துடனும் திறந்த மனதுடனும் செயல்படத் தயாராக இருத்தல், அத்துடன் பிறரின் பன்முகத்தன்மை, பன்மைத்துவம் மற்றும் சமூக யதார்த்தங்களை மதித்து ஏற்றுக்கொள்ளுதல்.
- கற்றலில் ஆர்வம்: தலைமைத்துவ மேம்பாடு மற்றும் முகாமில் விவாதிக்கப்படும் அடிப்படை விழுமியங்களான குறிப்பாக மனித உரிமைகள், உள்ளடக்கம், பன்முகத்தன்மை, பன்மைத்துவம் மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையிலான உரையாடல் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்ட ஆர்வம்.
- சமூக அடிப்படையிலான செயல்பாடுகளுக்கான அர்ப்பணிப்பு: இளைஞர் முகாமினைத் தொடர்ந்து, உள்ளூர் சமூகங்களில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான சமூகத் திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பும் ஊக்கமும் இருத்தல் வேண்டும்.
- பொறுப்புணர்வு மற்றும் குழுப்பணி: ஒதுக்கப்பட்ட பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றுதல், தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சிக்கு பங்களித்தல், மற்றும் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட பிற பங்கேற்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான திறன்.
- அமைப்பு ரீதியான தொடர்பு: விண்ணப்பதாரர் இந்தத் திட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் திறம்பட பங்களிப்பதற்கு வழிவகுக்கும் ஒரு அமைப்பு, பிணையம் நிறுவனம், முறைசார்ந்த அல்லது முறைசாரா இளைஞர் குழு அல்லது அது போன்ற அமைப்பில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

செலவுகள்:

- முகாம் காலத்தின் போது அனைத்து தங்கும் வசதிகளும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும், மேலும் இது தொடர்பான அனைத்து செலவுகளையும் ஆணைக்குழுவே ஏற்கும்.
- இளைஞர் முகாமில் பங்கேற்பதற்காக ஏற்படும் போக்குவரத்துச் செலவுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டு ஆணைக்குழுவினால் ஏற்கப்படும். முகாமின் அனைத்து நாட்களிலும் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுக்கு மட்டுமே முகாமின் இறுதி நாளில் போக்குவரத்துச் செலவுகள் மீளளிக்கப்படும்.
- இளைஞர் முகாமிற்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மேலதிக விவரங்கள் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் நடைமுறை:

- இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம், தேவையான பிற ஆவணங்களுடன் சேர்த்து **2026 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** hrcsl.youthcamp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- மேற்குறிப்பிட்ட அளவுகோல்கள் மற்றும் விண்ணப்பங்களில் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரண்டு பங்கேற்பாளர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவினால் அனைத்து தேர்வுகளும் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதியானது.
- மேலதிக விளக்கங்களுக்கு, தயவுசெய்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்வி மற்றும் சிறப்புத் திட்டப் பிரிவை 011-2505569 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

Human Rights Commission of Sri Lanka

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## இளைஞர் முகாம் – 2026

## விண்ணப்பப் படிவம்

முக்கிய அறிவுறுத்தல்கள்:

1.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தேவையான பிற சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.

2. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சமாதான நீதிவான் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அரசாங்க அதிகாரி ஒருவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்.

3. நீங்கள் ஒரு பல்கலைக்கழக மாணவராக இருந்தால், பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி இணைக்கப்பட வேண்டும்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட கடவுச்சீட்டு

அளவிலான (Passport-size) புகைப்படத்தை

இங்கே ஒட்டவும்.

A) தனிப்பட்ட தகவல்கள்

1. முழுப் பெயர்:

..............................................................................................................................

............................................................................................................................

2. முதலெழுத்துடன் கூடிய பெயர்: ...........................................................................

3. பாலினம்: பெண் [ ]   ஆண் [ ]   இதர [ ]

4. பிறந்த தேதி: (தேதி/மாதம்/ஆண்டு) ........ / ........ / ................

5. 26.10.2026 ஆம் திகதியன்று வயது: ........... ஆண்டுகள் ........... மாதங்கள்

6. தேசிய அடையாள அட்டை எண்:..................................... … ((ஒரு பிரதி இணைக்கப்பட வேண்டும்)

7. நிரந்தர முகவரி :…………………………………………………………………………

…..........................................................................................................................

..............................................................................................................................

8. தொலைபேசி எண்: (கைபேசி)) .............................(வீடு).........................................

9. மின்னஞ்சல் முகவரி:........................................................................................

10. நிர்வாக மாவட்டம்:...............................................

11. பிரதேச செயலகப் பிரிவு: ...........................................

12. கிராம சேவகர் பிரிவும் இலக்கமும்:: ..............................................

B) கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்

கல்வி கற்ற பாடசாலை / நிறுவனம் / பல்கலைக்கழகம்:

- ........................................................................................................
- ........................................................................................................
- ........................................................................................................
- ........................................................................................................
- ........................................................................................................
- ........................................................................................................

தொழில்சார் அல்லது உயர் கல்வித் தகைமைகள்

- ..........................................................................................................
- ..........................................................................................................
- ..........................................................................................................
- ..........................................................................................................
- ..........................................................................................................
- ..........................................................................................................

**C)** புறப்பாடத்திட்ட, தலைமைத்துவ மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள்

1. சமூகத்திற்கு நீங்கள் ஆற்றிய பங்களிப்பை சுருக்கமாக விளக்கவும் (50வார்த்தைகளுக்கு மிகாமல்):

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.........................

**2**நீங்கள் தற்போது பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது தீவிரமாகப் பங்கேற்கும் அமைப்பு / வலையமைப்பு / நிறுவனம் / குழுவின் விவரங்கள்:

அமைப்பின் / குழுவின் பெயர்: .........................................................................................

வகிக்கும் பதவி / பங்கு:: ..........................................................................................................

**3.** இந்த இளைஞர் முகாமில் பங்குபெற நீங்கள் விரும்புவதற்கான காரணத்தை சுருக்கமாக விளக்கவும் (100 வார்த்தைகளுக்கு மிகாமல்) : ………………………………

………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………

**D)** விண்ணப்பதாரரின் உறுதிமொழி / பிரகடனம்:

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் எனது அறிவிற்கும் நம்பிக்கிற்கும் எட்டியவரை உண்மையானவை என்றும் துல்லியமானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் தவறானவை அல்லது துல்லியமற்றவை என கண்டறியப்பட்டால், இத்திட்டத்திற்கான எனது தெரிவு தகுதி ரத்து செய்யப்படும் என்பதற்கு நான் உடன்படுகிறேன்

| | |
|---|---|
| .................................................... | ................................................................ |
| திகதி | விண்ணப்பதாரரின் கையொப்பம் |

**E)** சான்றளிப்பு / உறுதிப்படுத்தல்:

(சமாதான நீதிவான் / சட்டத்தரணி / அரச உத்தியோகத்தர் / அதிபர் ஆகியோரால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது)

மேற்குறிப்பிடப்பட்ட ……………………………………………………………………………… ……………………………………………………………………………………எனும் நபர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதையும், விண்ணப்பதாரரால் இணைக்கப்பட்டுள்ள கிராம நிலதாரி சான்றிதழை நான் பரிசீலித்து அது சரியானது எனச் சான்றளிக்கிறேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

...................................................

சான்றளிக்கும் அதிகாரியின் கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்:

பெயர்: .........................................................................................

பதவி: ............................................................................

முகவரி: ..................................................................................

தொலைபேசி எண்: ................................................................

திகதி: ........................................................................................